# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.17 (LW 27 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | தயாளன் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | சுப்பைய்யா | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **13.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நிலக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.03.2021ஆம் தேதி நிலைய இரவு காவலராக இருந்த போது அதிகாலை 5.45 மணியவில் நிலக்கோட்டை பகுதியில் உள்ள குரும்பபட்டியில் இருந்து மொக்கை ராஜ் மகன் சென்றாயன் என்பவர் இறந்து கிடப்பதாக தகவல் கிடைத்து, நான் அங்கு சென்று பார்த்த போது அவர் வீட்டின் கீழ் தளத்தில் தலை குப்புற கீழே விழுந்து கிடந்தார். அவருடைய கழுத்தில் பாதி சேலையும், மின்விசிறியில் பாதி சேலையும் கட்டப்பட்டு அறுந்த நிலையில் இருந்தது. அவரின் அருகில் இரத்த கரை இருந்தது. பின்னர் நிலக்கோட்டை காவல் நிலைய பொறுப்பில் இருந்த திருமதி. சண்முக லட்சுமி அம்மையநாயக்கனுர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் சொன்னேன். பின்னர் வாட்சப் மூலமாக புகைப்படத்தை அனுப்பி வைத்தேன். எனது செல்போனில் எடுத்த புகைப்படத்தை நான் வாட்சப் மூலமாக ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். நான் அனுப்பி வைத்த புகைப்படங்கள் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் 5 புகைப்படங்கள் ஆகும். அவை அ.சா.ஆ.10ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. ( மேற்படி புகைப்படங்களை குறியீடு செய்தவற்கு எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆடசேபனைக்குட்பட்டு மேற்படி புகைப்படங்கள் எடுக்க பயன்படுத்திய செல்போன் இந்த வழக்கில் கைப்பற்றப்படவில்லை என்றும் மேலும், அதில் இருந்து பதிவிறக்கசெய்யப்பட்டு பிரிண்ட் செய்யப்பட்டதற்காக இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(B)4 சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்பதால் மேற்படி ஆவணம் குறியீடு செய்யமுடியாது என்று வாதிட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி புகைப்படம் வாட்சப் மூலமாக

அனுப்பப்பட்டது என்பதாலும் அப்போது கொரொன காலம் என்பதாலும் உடனடியாக விசாரணை செய்வதற்கு தடையங்கள் மாற்றப்பட்டுவிடும் என்பதாலும் மேற்படி புகைப்படங்களை குறியீடு செய்து கொள்ளலாம் என்று வாதிட்டார். மேற்படி ஆடசேபணைக்குட்பட்டு அந்த புகைப்படங்களின் Admisibiltiy குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்பதன் அடிப்படையில் குறியீடு செய்யப்படுகிறது.) காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொல்லும் காலக்கட்டத்தில் கொரொன தொற்று காலம் இல்லை என்றால் சரியல்ல. அதனால் அப்போது எந்த வித தடை உத்தரவும் அமலில் இல்லை என்றால் சரியல்ல. நான் வாட்சப்பில் அனுப்பிய புகைப்படத்தை காவல் ஆய்வாளர் எவ்வாறு பிரிண்ட் எடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் புகைப்படங்களை பிரிண்ட் செய்யவில்லை. நான் சம்பவ இடத்திற்கு போன போது நிறைய கூட்டம் இருந்தது. காவல் நிலையத்தில் இருந்து சொல்லி நான் சம்பவம் இடம் சென்றேனா என்றால் காவல் நிலையத்தில் இருந்து சொல்லி செல்லவில்லை, நான் தகவல் கிடைத்து போனேன். குரும்பபட்டியில் இருந்து பூக்கடைக்கு வந்தவர்கள் மொக்கை ராஜ் மகன் இறந்து கிடப்பதாக சொன்னார்கள். நான் அங்கு சென்ற போது போலீசார் யாரும் இல்லை, நான் சென்ற பின்னர் 5 நிமிடம் கழிதது போலீசார் வந்தார்கள். VAOவிற்கு தகவல் சொல்லி அவரும் வந்தார். வாட்சப் மூலமாக புகைப்படங்களை காவல் ஆய்வாளருக்கு அனுப்பினேன் என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேன். நான் அன்றை தினம் ரோந்து பணியில் இல்லை என்றும், நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றும் சொல்வது சரியல்ல. நான் அரசு அதிகாரியின் உத்தரவின் பெயரில் செல்லவில்லை, தகவல் கிடைத்த உடன் நானாக தான் சென்றேன். அந்த விபரத்தை தான் ஆய்வாளர் விசாரனையில் சொன்னேன். **அ.சா.ஆ.10** வரிசை புகைப்படங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.</u>**

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:21:34 +0530

Additional District Judge,

Dindigul.